2010 ஏப்ரல் 23]

(இ) காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை, ஜெனரேட்டர் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.*

திரு. கோ. அரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழகம் மட்டுமன்றி, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு ரேடியோ கதிர்வீச்சு அவசியம் தேவைப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் அந்த அரசு மருத்துவமனையில் ஜெனரேட்டர்கூட இல்லாமல் மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் மின் தட்டுப்பாடு ஏற்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அந்த நோயாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஜெனரேட்டர் வசதி செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–15

(ஈ) கோவை, மெர்கன்டைல் நிதி நிறுவனம் நடத்தி மோசடி— ஏமாந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில், Mercantile என்ற ஒரு நிதி நிறுவனத்தின் பெயரில், திருமதி சசிரேகா என்பவர் ரூ.150 கோடிக்கு மேல் மோசடி செய்துள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. இந்த மோசடி நிதி நிறுவனத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் முதலீடு செய்து ஏமாந்து, பணத்தையும் இழந்து, மன உளைச்சலுக்கும் ஆளாகக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது. இதுபோல, பல மோசடி நிறுவனங்கள் நாட்டிலே முளைத்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கும், இந்த மோசடி நிறுவனத்திடம் ஏமாந்தவர்களுக்கு உரிய வகையில் இழப்பீட்டுத்*

தொகை கிடைப்பதற்கும் அரசு ஆவன செய்து, அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான், முடிந்துவிட்டது. அடுத்து, வேறு சப்ஜெக்ட் எடுக்கிறேன். கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்கு. . . *(குறுக்கீடு)*

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி செல்ஃபோனில் பலருடன் தொடர்பு கொண்டது— நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், வேலூர் பெண்கள் சிறையிலிருக்கும் திருமதி நளினியினுடைய அறையிலிருந்து செல்ஃபோன் எடுத்ததைக் குறிப்பிட்டு, அதற்கு மேற்கொண்டு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

இது குறித்து நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். 20–4–2010 அன்று காலையில் சுமார் 6–00 மணியளவில் routine check–up என்ற முறையில் Jail Superintendent அவர்களும், மற்ற அதிகாரிகளும் அறைதோறும் சோதனையிட்டு வந்தபொழுது, நளினியினுடைய அறைக்குச் சென்று சோதனையிட முயன்றிருக்கிறார்கள். அவர்கள் சோதனையிடுகிறபொழுது, திருமதி நளினி ஒரு துணிப் பையை எடுத்து தொலைவிலே வீசியிருக்கிறார் என்றும், அதைக் கைப்பற்றிப் பார்த்தபொழுது, அதிலே ஒரு செல்ஃபோன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், திருமதி நளினி அவர்கள் அதைப் பிடுங்கி ஒரு bucket–லே போட்டு, அதை toilet–க்குள் ஊற்றிவிட்டதாகவும், Deputy Jailor அவர்கள் பாய்ந்து சென்று toilet–க்குள் கையைவிட்டு அதை எடுத்து 'Q' Branch–க்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றும் நான் அன்றைக்குத் தெரிவித்தேன்.